முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

நிறைவேற்றுகை மனு எண். 19/2018

எ.ம..சா.2– மாணிக்கவாசகம்

07–02–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தறி ஓட்டி வருகிறேன். மனுவில் உள்ள 2ம் எதிர்மனுதாரர் சண்முகத்தை என்பவரை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 25 ஆண்டுகளாக தெரியும். எப்படி தெரியும் என்றால் நான் பனியன் கம்பெனி வைத்திருந்தேன். வியாபாரத்திற்கு சென்ற வகையில் பழக்கம். என் பனியன் கம்பெனி பெயர் என்ன என்றால் மிக்சன் கார்மெண்ட்ஸ். சண்முகம் என்ன கம்பெனி வைத்திருந்தார் என்றால் பனியன் வியாபாரம் செய்து வந்தார்.

2) நான் என்னுடைய வியாபாரத்திற்கு வருமான வரி செலுத்தினேனா என்றால் நான் சிறிய அளவில் வியாபாரம் செய்ததால் வருமான வரி செலுத்தவில்லை. சண்முகத்தின் அப்பா பெயர் என்ன என்றால் சென்னியப்பக் கவுண்டர். சென்னியப்பக் கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் சண்முகத்தை மட்டும் தெரியும். மற்றவர்கள் பற்றி எனக்கு தெரியாது. சண்முகத்தின் சொத்தை உதவி ஆணையர், விற்பனை அலுவலகம், பொள்ளாச்சி என்பவரால் ஜப்தி செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

3) நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தின் விவரங்கள் யார் சொன்னார்கள் என்றால் சண்முகம் சொன்னார். நேரில் கேட்டதை வைத்து தெரிவித்துள்ளேன். சண்முகத்திற்கு மனுச் சொத்து எப்படி பாத்தியம் என்றால் சென்னியப்ப கவுண்டர் ஏற்படுத்திய உயில்படி பாத்தியம் உயில் ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. சண்முகம் சொல்லி கேட்டுள்ளேன். இந்த விவரங்களை சண்முகம் எப்போது என்னிடம் சொன்னார் என்றால் ஞாபகமில்லை. ரொம்ப நாட்களாகி விட்டது.

4) தான செட்டில்மெண்ட் ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் எங்கு வைத்து எழுதியது என எனக்கு தெரியாது. சொத்துக்கள் தான செட்டில்மெண்ட் மூலம் கொடுக்கப்பட்டது தெரியும். நிறைவேற்றுகை மனு என்றால் என்ன என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணை விவரங்களை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். நிறைவேற்றுகை மனு என்ன என்றால் நான் சாட்சி சொன்ன விவரம். சென்னியப்ப கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் வருடம் ஞாபகமில்லை. சண்முகம் எப்போது இறந்தார் என்றால் 2018ம் ஆண்டு இறந்து போனார்.

5) மனுச் சொத்தின் கதவு எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. சுவாதீனம் என்றால் என்ன என்றால் சொத்தை அனுபவம் செய்வது. சாட்சியமளிக்க என்னை யார் அழைத்து வந்தார்கள் என்றால் 8ம் எதிர்மனுதாரர் அழைத்து வந்தார்.அவர் எனக்கு என்ன உறவு என்றால் குடும்ப நண்பர். சண்முகத்தின் தாயார் உள்ளாரா என்றால் இல்லை. இறந்துவிட்டார். எப்போது இறந்தார் என்றால் தெரியாது.

6) மனுச் சொத்து 8ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணம் பார்த்தீர்களா என்றால் இல்லை. தான செட்டில்மெண்ட் ஆவணம் உள்ளது. அதன் விவரம் தெரியுமா என்றால் சண்முகம் சொல்லி தெரியும். தான செட்டில்மெண்ட் ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் ஞாபகமில்லை. மனு மற்றும் வழக்கு விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது. 8ம் எதிர்மனுதாரர் கேட்டுக் கொண்டதற்காக அவர் சொல்லி முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.02.07 17:51:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.